## பகுதி IV - 8 மதிப்பெண் வினாக்கள் - வடிவியல்

### பயிற்சி 4.1

**10. கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$ -யின் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{2}{3}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{2}{3} < 1$)**

**உதவிப் படம்**




குறிப்பு: $\frac{2}{3} < 1$ எனில், வடிவொத்த முக்கோணம் உட்பக்கம் அமையும்.




**வரைதலின் படிகள்:**

1. ஏதேனும் ஓர் அளவைக் கொண்டு $\Delta PQR$ வரைந்தேன்.
2. $QR$ என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு, $QX$ என்ற கதிரை $P$ என்ற முனைப் புள்ளிக்கு எதிர் திசையில் வரைந்தேன்.
3. $QX$ -யின் மீது $Q_1, Q_2$ மற்றும் $Q_3$ என்ற 3 புள்ளிகளை ($\frac{2}{3}$ -யில் 2,3 ஆகியவற்றில் பெரியது 3 என்பதால்) $QQ_1 = Q_1Q_2 = Q_2Q_3$ குறித்தேன்.
4. $Q_3R$ -ஐ இணைத்து, $Q_3$ ஐ மையமாக வைத்து, ஏதேனும் ஒரு கோண அளவில் வில் வெட்டி, அதே அளவில் $Q_2$ ஐ மையமாக வைத்து, ஒரு வில் வரைந்து, அவ்வில் $QX$ கோட்டை வெட்டும் புள்ளியில் இருந்து மற்றொரு வில் விரைந்து அவை வெட்டும் புள்ளியையும் $Q_2$ புள்ளியையும் இணைத்தால் அது $R'$ ல் சந்திக்கிறது. (2-வது புள்ளி, அதாவது $\frac{2}{3}$ -யில் 2 மற்றும் 3 ஆகியவற்றில் சிறியது)
5. $R$ ஐ மையமாக வைத்து கீழே வரைந்த கோண அளவில் வில் வெட்டி, $R'$ -லிருந்து $RP$ -க்கு இணையாக வரையப்படும் கோடு $QP$ -ஐ $P'$ -யில் சந்திக்கிறது.

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

11. கொடுக்கப்பட்ட முக்கோணம் $LMN$ -ன் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{4}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக (அளவு காரணி $\frac{4}{5} < 1$)

**எ.கா.4.10:** கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$-க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{3}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{3}{5} < 1$) **(JUN-23)**

**12. கொடுக்கப்பட்ட முக்கோணம் $ABC$ -யின் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{6}{5}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{6}{5} > 1$).**

PTA-1, SEP-20




**உதவிப் படம்**




குறிப்பு: $\frac{6}{5} > 1$ எனில், வடிவொத்த முக்கோணம் வெளிப்புறம் அமையும்.

**வரைதலின் படிகள்:**

1. ஏதேனும் ஓர் அளவைக் கொண்டு $\Delta ABC$ வரைந்தேன்.
2. $BC$ என்ற கோட்டுத்துண்டில் குறுங்கோணத்தை ஏற்படுத்துமாறு, $BX$ என்ற கதிரை $A$ என்ற முனைப் புள்ளிக்கு எதிர் திசையில் வரைந்தேன்.
3. $BX$ -யின் மீது $B_1$, $B_2$, $B_3$, $B_4$, $B_5$ மற்றும் $B_6$ என்ற 6 புள்ளிகளை ($\frac{6}{5}$ -யில் 6 மற்றும் 5 ஆகியவற்றில் பெரியது 6 என்பதால்) $BB_1 = B_1B_2 = B_2B_3 = B_3B_4 = B_4B_5 = B_5B_6$ என்றவாறு குறித்தேன்.
4. $B_5$-ஐ (5-வது புள்ளி, அதாவது $\frac{6}{5}$ -யில் 6 மற்றும் 5 ஆகியவற்றில் சிறியது) புள்ளி $C$ வுடன் இணைத்தேன். $B_6$ லிருந்து வரையப்படும் கோடு $BC$ -ஐ $C'$ -யில் சந்திக்கிறது.
5. $C'$-லிருந்து $CA$ -க்கு இணையாக வரையப்படும் கோடு $BA$-ஐ $A'$-யில் சந்திக்கிறது. $\Delta A'BC'$ -யின் பக்கங்கள் $\Delta ABC$ -ன் ஒத்த பக்கங்களின் அளவில் 6-ல் 5 பங்கு ஆகும்.

**இது போன்ற கணக்குகள்** சுயமாக பயிற்சி செய்யவும்.

13. கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$ -ன் ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{3}$ என்றவாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{7}{3} > 1$) **(JUL-22)**

**எ.கா.4.11:** கொடுக்கப்பட்ட முக்கோணம் $PQR$-க்கு ஒத்த பக்கங்களின் விகிதம் $\frac{7}{4}$ என அமையுமாறு ஒரு வடிவொத்த முக்கோணம் வரைக. (அளவு காரணி $\frac{7}{4} > 1$)

## பயிற்சி 4.2

11. $PQ = 4.5$ செ.மீ, $\angle R = 35^{\circ}$ மற்றும் உச்சி $R$-யிலிருந்து வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் $RG = 6$ செ.மீ என அமையுமாறு $\Delta PQR$ வரைக.

SEP-21




உதவிப் படம்




**வரைதலின் படிகள்:**

1. $PQ = 4.5$செ.மீ என்ற கோட்டுத்துண்டு வரைந்தேன்.
2. $\angle QPE = 35^{\circ}$ என இருக்கும்படி $PE$ வரைந்து, புள்ளி $P$ வழியே $\angle FPE = 90^{\circ}$ என இருக்கும்படி $PF$ வரைந்தேன்.
3. $PQ$-க்கு வரையப்படும் மையக்குத்துக் கோடு $PF$-ஐ, $O$-விலும், $PQ$-ஐ $M$-லும் சந்திக்கிறது.
4. $O$-வை மையமாகவும், $OQ$-வை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைந்தேன்.
5. $O$-வை மையமாகவும், $OQ$-வை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைந்தேன்
6. $M$ லிருந்து 6 செ.மீ ஆரமுள்ள வில்களை வட்டத்தில் வெட்டுமாறு வரைந்தேன். அவை வெட்டும் புள்ளிகளை $R, R'$ எனக் குறித்தேன்.
7. $PR$ மற்றும் $RQ$ -யை இணைத்தேன். $\Delta PQR$ தேவையான முக்கோணம் ஆகும்.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

**எ.கா.4.17:** $PQ = 8$ செ.மீ, $\angle R = 60^{\circ}$ உச்சி $R$-லிருந்து $PQ$-க்கு வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் $RG = 5.8$ செ.மீ. என இருக்குமாறு $\Delta PQR$ வரைக. $R$-லிருந்து $PQ$-க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் காண்க. **(PTA-4)**

14. $AB = 5.5$ செ.மீ, $\angle C = 25^{\circ}$ மற்றும் உச்சி $C$-யிலிருந்து $AB$-க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் 4 செ.மீ உடைய $\Delta ABC$ வரைக.

MAY-22




உதவிப் படம்




**வரைதலின் படிகள்:**

1. $AB = 5.5$செ.மீ என்ற கோட்டுத்துண்டு வரைந்தேன்.
2. புள்ளி $A$ வழியே $\angle BAE = 25°$, $\angle FAE = 90°$ என இருக்கும்படி $AB$-க்கு வரையப்படும் மையக்குத்துக்கோடானது $AF$-ஐ $O$-விலும், $AB$ஐ $M$ லும் சந்திக்கிறது.
3. $O$-வை மையமாகவும், $OB$-யை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைந்தேன்.
4. $M$-யிலிருந்து மையக் குத்துக்கோட்டை 4 செ.மீ தூரத்தில் வெட்டினேன். அந்த புள்ளிக்கு $N$ என பெயரிட்டேன்.
5. $CC'$ வரைந்னே், $AC$ மற்றும் $BC$ ஆகியவற்றை இணைத்தேன்.
6. $\Delta ABC$ என்பது தேவையான முக்கோணம் ஆகும்.

**இது போன்ற கணக்குகள்**
சுயமாக பயிற்சி செய்யவும்.

12. $QR = 5$ செ.மீ, $\angle P = 40^{\circ}$ மற்றும் உச்சி $P$-யிலிருந்து $QR$-க்கு வரையப்பட்ட நடுக்கோட்டின் நீளம் $PG = 4.4$ செ.மீ என இருக்கும்படி $\Delta PQR$ வரைக. மேலும் $P$ –லிருந்து $QR$-க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் காண்க.
13. $QR = 6.5$ செ.மீ, $\angle P = 60^{\circ}$ மற்றும் உச்சி $P$-யிலிருந்து $QR$-க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் 4.5செ.மீ உடைய $\Delta PQR$ வரைக.

**எ.கா.4.18:** $QR = 5$ செ.மீ, $\angle P = 30°$ மற்றும் $P$-யிலிருந்து $QR$-க்கு வரையப்பட்ட குத்துக்கோட்டின் நீளம் 4.2செ.மீ கொண்ட $\Delta PQR$ வரைக. **(PTA-5)**

**16.** $PQ = 6.8$ **செ.மீ, உச்சிக்கோணம்** $50^\circ$ **மற்றும் உச்சிக்கோணத்தின் இருசமவெட்டியானது அடிப்பக்கத்தை** $PD = 5.2$ **செ.மீ என** $D$**–யில் சந்திக்குமாறு அமையும்** $\Delta PQR$ **வரைக.**

PTA-4




**உதவிப் படம்**




**இது போன்ற கணக்குகள்**
**சுயமாக பயிற்சி செய்யவும்.**

15. அடிப்பக்கம் $BC = 5.6$ செ.மீ, $\angle A = 40^\circ$, $\angle A$-யின் இருசமவெட்டியானது அடிப்பக்கம் $BC$-ஐ $CD = 4$ செ.மீ என $D$-யில் சந்திக்குமாறு அமையும் முக்கோணம் $ABC$ வரைக.

**எ.கா.4.19:** அடிப்பக்கம் $BC = 8$ செ.மீ,$\angle A = 60^\circ$ மற்றும் $\angle A$ -யின் இருசமவெட்டியானது $BC$-ஐ $D$ என்ற புள்ளியில் $BD = 6$ செ.மீ என்றவாறு சந்திக்கிறது எனில், முக்கோணம் $ABC$ வரைக. **(APR-23, MDL)**

**வரைதலின் படிகள்:**

1. $PQ = 6.8$ செ.மீ என்ற கோட்டுத் துண்டு வரைந்தேன்.
2. புள்ளி $P$ வழியே $\angle QPE = 50^\circ$ என இருக்கும்படி $PE$ வரைந்தேன்.
3. புள்ளி $P$ வழியே $\angle EPF = 90^\circ$ என இருக்கும்படி $PF$ வரைந்தேன்.
4. $PQ$-க்கு வரையப்படும் மையக்குத்துக்கோடானது $PF$-ஐ $O$-விலும், $PQ$-யை $G$-யிலும் சந்திக்கிறது.
5. $O$-வை மையமாகவும், $OP$-யை ஆரமாகவும் கொண்டு ஒரு வட்டம் வரைந்தேன்.
6. புள்ளி $P$-யிலிருந்து $PQ$-யில் 5.2 செ.மீ தொலைவில் $D$ என்ற புள்ளிக்கு ஒரு வில் வரைந்தேன்.
7. மையக்குத்துக்கோடானது வட்டத்தை $I$ என்ற புள்ளியில் சந்திக்கிறது.
8. $ID$-யை இணைத்தேன்.$ID$-யை வட்டத்தில் $R$-யில் சந்திக்குமாறு நீட்டிப்பு செய்தேன். $PR$ மற்றும் $QR$-யை இணைத்தேன்.
9. $\Delta PQR$ என்பது தேவையான முக்கோணம் ஆகும்.

## பயிற்சி 4.4

11. $P$ **ஐ மையமாகக் கொண்ட 3.4 செ.மீ ஆரமுள்ள ஒரு வட்டத்திற்கு** $R$ **என்ற புள்ளியில் தொடுகோடு வரைக.**

**உதவிப் படம்**







**வரைதலின் படிகள்:**

1. $P$-வை மையமாகக் கொண்டு 3.4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைந்தேன்.
2. வட்டத்தின் மேல் $R$ என்ற புள்ளியைக் குறித்து $PR$-ஐ இணைத்தேன்.
3. புள்ளி $R$ வழியே $PR$-க்கு செங்குத்தாக $TT'$ வரைந்தேன்.
4. $TT'$ தேவையான தொடுகோடு ஆகும்.

**இது போன்ற கணக்குகள்**
**சுயமாக பயிற்சி செய்யவும்.**

**எ.கா.4.29:** 3 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மேல் $P$ என்ற புள்ளியைக் குறித்து அப்புள்ளி வழியே தொடுகோடு வரைக.

**12. 4.5 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மீது ஏதேனும் ஒரு புள்ளிக்கு மாற்று வட்டத்துண்டு தேற்றத்தினைப் பயன்படுத்தித் தொடுகோடு வரைக.**




**உதவிப் படம்**




**வரைதலின் படிகள்:**

1. $O$-வை மையமாகக் கொண்டு 4.5 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைந்தேன்.
2. வட்டத்தின் மேல் $L$ என்ற புள்ளியைக் குறித்தேன். $L$ வழியே ஏதேனும் ஒரு நாண் $LM$ வரைந்தேன்.
3. $L, M$ மற்றும் $N$ என்பன கடிகார முள்ளோட்டத்தின் எதிர் திசையில் அமையுமாறு குறித்தேன். $LN$ மற்றும் $NM$-ஐ இணைத்தேன்.
4. $\angle TLM = \angle MNL$ என அமைந்தது, $LQ$ ஐ, இணைத்தேன்.
5. வில் $LM$ ஐ $P$ ல் வெட்டுகிறது.
6. அதே அளவில் $P$ யிலிருந்து மற்றொரு வில் வெட்டினேன்.
7. $TLT'$ என்பது தேவையான தொடுகோடாகும்.

**இது போன்ற கணக்குகள்**
**சுயமாக பயிற்சி செய்யவும்.**

**எ.கா.4.30:** 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மீதுள்ள $L$ என்ற புள்ளி வழியாக மாற்று வட்டத்துண்டு தேற்றத்தைப் பயன்படுத்தி வட்டத்திற்குத் தொடுகோடு வரைக.

**13. 5 செ.மீ ஆரமுள்ள வட்டத்தின் மையத்திலிருந்து 10 செ.மீ தொலைவிலுள்ள புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரையவும். மேலும் தொடுகோட்டின் நீளங்களைக் கணக்கிடுக.**

JUN-23, SEP-20




**உதவிப் படம்**




தொடுகோட்டின் நீளம் = **8.7 செ.மீ**

**சரிபார்த்தல்:**

$$PA = \sqrt{OP^2 - OA^2}$$
$$= \sqrt{10^2 - 5^2}$$
$$= \sqrt{100 - 25}$$
$$= \sqrt{75}$$
$$\simeq \mathbf{8.7} \text{ செ.மீ}$$

(தோராயமாக)

**வரைதலின் படிகள்:**

1. $O$-வை மையம் என 5 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைந்தேன்.
2. $O$ விலிருந்து $OP = 10$ செ.மீ நீளமுள்ள கோடு வரைந்தேன்.
3. $OP$-க்கு மையக்குத்துக் கோடு வரைந்தேன். அது $OP$-ஐ $M$-ல் சந்திக்கும்.
4. $M$-யை மையமாகவும், $MO$-வை ஆரமாகவும் கொண்டு வரையப்படும் வட்டமானது முந்தைய வட்டத்தை $A$ மற்றும் $B$ –யில் சந்திக்கிறது.
5. $AP$ & $BP$ யை இணைத்தேன். $AP$ மற்றும் $BP$ தேவையான தொடுகோடுகள் ஆகும்.

**இது போன்ற கணக்குகள்**
**சுயமாக பயிற்சி செய்யவும்.**

14. 4 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைந்து அதன் மையத்திலிருந்து 11 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறித்து. அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்கு இரண்டு தொடுகோடுகள் வரைக. **(APR-23, PTA-2)**
15. 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 5 செ.மீ தொலைவிலுள்ள ஒரு புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரைந்து, தொடுகோட்டின் நீளங்களைக் கணக்கிடுக. **(MAY-22)**
16. $O$ –வை மையமாகக் கொண்ட 3.6 செ.மீ ஆரமுள்ள வட்டம் வரைக. வட்டத்தின் மையத்திலிருந்து 7.2 செ.மீ தொலைவிலுள்ள $P$ என்ற புள்ளியைக் குறித்து அப்புள்ளியிலிருந்து வட்டத்திற்குத் தொடுகோடுகள் வரைக.

**எ.கா.4.31:** 6 செ.மீ விட்டமுள்ள வட்டம் வரைந்து வட்டத்தின் மையத்திலிருந்து 8 செ.மீ தொலைவில் $P$ என்ற புள்ளியைக் குறிக்கவும். அப்புள்ளியிலிருந்து $PA$ & $PB$ என்ற இரு தொடுகோடுகள் வரைந்து அவற்றின் நீளங்களை அளவிடுக. **(JUL-22)**